# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2143 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27

*2143 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1638 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1642 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1647 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1637 - B81564 - 5403(2019/09)

# பதவிகள்- வெற்றிடம்

## தென் மாகாண அரசாங்க சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

*கரந்தெனிய பிரதேச சபை*

*கரந்தெனிய பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள கரந்தெனிய பிரதேச சபையின் ஆட்சிப்பரப்பினுள் நிரந்தர வதிவிடதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவுத் திட்டம் | ஆட்சேர்த்தலுக்கான ஆகக் குறைந்த தகைமைகள்/மேலதிக தகைமைகள் |
|---|---|---|---|
| வேலை/வெளிக்கள தொழிலாளர் தரம் III | 02 | PL1 - 2016 Grade III<br>ரூ. 24,250.00-10 X 250-10 X 270-10 X 300-12 X 330- ரூ. 36,410.00 | 08 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல். |
| ஆயுர்வேத மருந்து கலவையாளர் | 02 | PL2 - 2016 Grade III<br>ரூ. 25,250.00-10 X 270-10 X300-10 X 330-12 X 350- ரூ. 38,450.00 | (i) இரு அமர்வுக்கு மேற்படாத வகையில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஏதேனுமொரு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>(ii) குறித்த பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில் தகைமையில் (NVQ) ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டத்தில தேர்ச்சியைப் பெற்றிருத்தல் அல்லது இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு மற்றும் அவ்வாறு ஆட்சேர்ப்பின் பின்னர் அப் பதவிக்குரிய வக்வெல்ல முகாமைத்துவ மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று மாத கல்வி நெறியைக் கற்று உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் (இச் சான்றிதழ் மூன்று வருட தகுதிகாண் காலத்தினுள் பெற்றிருத்தல்.)<br>(iii) தொடர்புடைய துறையில் உள்ள அனுபவம் மேலதிக தகைமையாகும். |

02. **வயது எல்லை :**

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கு இந்த அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.)

03. **பொதுவான தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி வம்சாவழியாக அல்லது பதிவு மூலமாக இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிட்டிய 03 வருட காலத்தில் தென் மாகாண சபை எல்லையினுள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். வதிவிடத் தொகுதியில் கிராம அலுவலரால் வழங்கப்பட்டு

உரிய பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தி கையொப்பமிட்டு இருத்தல் வேண்டும். கரந்தெனிய பிரதேச சபை அதிகாரப் பரப்பினுள் வதிவிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டால் ஒரு மாத காலத்தினுள் அரசாங்க மருத்துவ பரிசோதனைக்கு உட்படுவதுடன் இப் பரிசோதனையில் உடல் நிலையில் தகுதியற்றவர் என தெரிந்தால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

(iv) குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக தண்டனைத் தீர்ப்புப் பெற்ற ஒருவராக அல்லது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் இருந்து நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

(vi) விண்ணப்பதாரிக்கு உரிய பதவிக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த கல்வித் தகைமை இருத்தல் வேண்டும்.

04. **பொதுவான நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இடைப்பட்ட கால எல்லையில் அல்லது ஆட்சேர்ப்புச் செய்தலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல், இவ் அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் உரிமை கரந்தெனிய பிரதேச சபையின் தலைவருக்கு உரித்தானதாகும்.
(ii) தெரிவு செய்யப்பட்டால் ஒரு மாத காலத்துக்குள் அரசாங்க வைத்திய பரிசோதனை ஒன்றில் தோன்ற வேண்டியதுடன் அதில் தேறாதவராகத் தோன்றினால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

05. **பணிக்கமர்த்தும் நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய சம்பளம் உள்ளது. ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். விதவைகள்/அநாதைகள், தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதிய சம்பளத் திட்டத்திற்கு நீங்கள் பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் நியமிக்கப்படும் விதத்தில் உங்களால் அப் பங்களிப்பினை செலுத்தல் வேண்டும்.
(ii) இந் நியமனம் மூன்று (03) வருடத்திற்கு தகுதிகூர் நிலைக்கு உள்ளாகியது. அக் காலத்திற்குள் கடமை, வரவு, நடத்தை ஆகியவற்றை திருப்திகரமாயின் தகுதிகூர் கால இறுதியில் சேவை நிரந்தரமாக்கப்படும்.

06. இவ் ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும் தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைகளுக்கும் மேல் மாகாண சபை அல்லது தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைவாக சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

07. **ஆட்சேர்ப்பு முறை:**

(i) தகைமைகள் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
(ii) (அ) வேலை/வெளிக்கள தொழிலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையின் புள்ளி விபர முறை –

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான பகுதிகள் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | தெரிவு செய்யப்படுவதற்கான கணிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. கல்வித் தகைமைகள் | 30 | 50% |
| 2. மேலதிக தகைமைகள் | 10 | |
| 3. சேவைக்குரிய அனுபவங்கள் | 10 | |
| 4. சபை அதிகாரப் பரப்பினுள் வதிவுக்காலம் (ஓர் ஆண்டுக் காலத்திற்கு 5 புள்ளிகள் வீதம்) | 45 | |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

(ii) (ஆ) ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளி விபர முறை -

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான பகுதிகள் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | தெரிவு செய்யப்படுவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. கல்வித் தகைமைகள் | 30 | 50% |
| 2. மேலதிக தகைமைகள் | 10 | |
| 3. சேவைக்குரிய அனுபவங்கள் | 10 | |
| 4. சபை அதிகாரப் பரப்பினுள் வதிவுக்காலம் (ஓர் ஆண்டுக் காலத்திற்கு 5 புள்ளிகள் வீதம்) | 45 | |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

**குறிப்பு** 1. அடிப்படைத் தகைமைகள் பரிசீலித்தல், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலேயே செய்யப்படும்.

2. அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளிடமிருந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் ஒழுங்கு முறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

08. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் பதவியை குறிக்க வேண்டியதுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்திய நிழற்பிரதிகளையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ்;
(ii) ஆளடையாள அட்டையின் நிழற்படப் பிரதி;
(iii) கல்விச் சான்றிதழ்/பாடசாலை விடுகைச் சான்றிதழ்;
(iv) வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (வதிவிடத் தொகுதியில் கிராம அலுவலரால் 06 மாத காலத்திற்குள் வழங்கப்பட்டு உரிய பிரதேச செயலாளரால் உறதிப்படுத்தி கையொப்பமிட்டு இருத்தல் வேண்டும்.
(v) அண்மைக் காலத்தில் பெற்றுக் கொண்ட இரு நன்னடத்தைச் சான்றிதழ்கள்
(vi) தொழில் தகைமை அல்லது அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்)
(vii) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்

இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் 15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “தவிசாளர், கரந்தெனிய பிரதேச சபை, கரந்தெனிய’’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும் (விண்ணப்பப்படிவங்கள் A4 அளவுள்ள கடதாசியில் தயாரித்தல் வேண்டும்.) பூரணப்படுத்தாத, தெளிவற்ற மற்றும் குறிப்பிடப்பட்ட தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

தவிசாளர்,
கரந்தெனிய பிரதேச சபை.

கரந்தெனிய பிரதேச சபை,
2019, ஒற்றோபர் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கரந்தெனிய பிரதேச சபை**

வேலை/வெளிக்கள தொழிலாளர் /ஆயுர்வேத மருந்து கலவையாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் : ..........................................................................................................................................

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள்: ..........................................................................................
..........................................................................................................................................................

3. நிரந்தர வதிவிட முகவரி : ..............................................................................................................................................

4. நிரந்தர வதிவிடமுள்ள மாவட்டம் : ..............................................................................................................................

5. பிறந்த திகதி :
வருடம் : ........................................................ மாதம் : .................................................. திகதி : ....................................................

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

7. பால் : ஆண்/பெண் : ................................................

8. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ........................................ மாதங்கள் : ........................................ நாட்கள் :........................................

9. விவாகமானவரா ? விவாகமாகாதவரா? : ..............................................................................................

10. இனம் : ..........................................................................................

11. நீர் இலங்கைப் பிரசையா ? அப்படியாயின் பதிவின் மூலமாகவா ? .......................................................................

12. கல்வித் தகைமைகள் : (சித்தி பெற்ற பரீட்சைகளின் விபரங்கள்)
சித்தியடைந்த தரம்/ஆண்டு : ...............................................................................................................................................

க. பொ. த. (சா.த) பரீட்சை :
(i) சுட்டெண் : ..................................................................................
(ii) பரீட்சைக்கு தோற்றிய வருடம் : ....................................................................................
(iii) சித்தியடைந்த பாடங்கள் :

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9 | | |
| 5. | | | 10. | | |

13. தொழிற்சார் மற்றும் ஏனைய தகைமைகள் (சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
..............................................................................................................................................
..............................................................................................................................................

14. சேவை அனுபவம்:
..............................................................................................................................................
..............................................................................................................................................

15. நீங்கள் எப்பொழுதாவது நீதிமன்றம் ஒன்றினால் ஏதேனுமொரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுள்ளவரா? அப்படியெனில் விபரங்கள் : ..............................................................................................................................................
..............................................................................................................................................

16. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற வகையில் உண்மையானவையும் பிழையற்றவையும் என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக் கொள்ளும்

நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்துக்கு முன்னரெனின் தகுதியற்றவனாவேன் எனவும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்துக்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.....................................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .................................

09-853

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## அரநாயக்க பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் 24 (1) ஆம் உறுப்புரையின் கீழ் மேற் கொள்ளப்படும் அறிவித்தல்.

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (விளைவாந் தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் 24 (1) 'ஆ' ஆம் உறுப்புரைக்கு ஏற்ப, செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுவதுடன் சப்பிரகமுவ மாகாண கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள CLG/ LG-5/ 5/ 1/ 19 எனும் இலக்கம் கொண்ட 2019.05.28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் அரநாயக்க பிரதேச சபைக்கு சொந்தமானவையென இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இந்த அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதைகள், யாதாயினும் ஒரு காணியின் ஊடாகவோ அந்தக் காணியின் உரிமையாளர் என உரிமைகோரும் யாராயினும் ஒரு பிரிவினர் ஆயின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று மாத காலத்திற்குள் அந்தக் காணிக்கு உரிய உரிமையை நிரூபிப்பதற்காக யாதேனும் நீதிமன்றத்தில் வழக்குக் தொடுத்து எதிர்ப்பை வெளியிட வேண்டுமென பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு ஏற்ப இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கே. ஏ. நிஹால் செனவிரத்ன,
தலைவர்,
அரநாயக்க, பிரதேசசபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரனாயக்க,
2019, செத்தெம்பர் 06.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | துல்தெனிய பூணாப்பொகுண கிரிங்கல துணைப் பாதை. |
| பாதையின் ஆரம்பம் | : | துல்தெனியில் இருந்து தெல்லக வரையுள்ள பிரதேச சபைப் பாதை. |
| பாதையின் முடிவு | : | திரு. எல். பி. பியதாச லியனகே உரிமை கோரும் துனுமடலகஹ மடித்தஹேன காணி வரை. |
| கிராம அலுவலர் பிரிவு | : | 42, ஏ துல்தெனிய |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 40 மீற்றர், அகலம்: 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரைபாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|
| 1. | திரு. ஜீ. கே. ருவன் பதிரன | உடவெரல்லஹேன்யாய |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|
| 1. | திரு. எல். பி. பியதாச லியனகே | துனுமடலகஹமடித்தஹேன |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச்.எம்.ஆர்.டீ.கே. ஹேரத் அவர்களால் 2019.03.11 ஆந் திகதி அளக்கப்பட்ட படவரைபு இலக்கம் 368/2019 எனும் படவரைபுக்கு ஏற்பவாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | பொல்அம்பேகொட தபால் கந்தோருக்கு அருகில் செல்லும் பொல்அம்பேகொட வத்த பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | மாவனெல்லைப் பிரதான பாதை |
| பாதையின் முடிவு | : | திரு. யூ. நிசாந்த குமார பிரியநந்தன உரிமை கோரும் பொல் அம்பேகொடவத்த காணி வரை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 46 ஏ கொடிகமுவ பிரிவு |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 172 மீற்றர் அகலம்: 12 மற்றும் 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. எச். பி. கிரிபந்து | ஹக்கல்பொத்தேவத்த |
| 2. திரு. எச். பி. குணபால | ஹக்கல்பொத்தேவத்த |
| 3. திரு. கே. ஜயமங்கல | பொல்அம்பேகொடவத்த |
| 4. திரு. யூ. ஆர். சீ. எஸ். குமார | பொல்அம்பேகொடவத்த |
| 5. திரு. எச். எம். லசந்த திலக | பொல்அம்பேகொடவத்த |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திருமதி ஏ. பி. சமிலா குமாரி | கல்லத்தன்னேவத்த |
| 2. திரு.எச். என். பிரணாந்து | பொல்அம்பேகொடவத்த |
| 3 திரு. யூ. டீ. நிமல் கருணாரத்ன | பொல்அம்பேகொடவத்த |
| 4. திருமதி ஏ. ஜீ. சமிலா குமாரிஹாமி | பொல்அம்பேகொடவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச்.எம்.ஆர்.டீ.கே. ஹேரத் அவர்களால் 2019.03.30 ஆந் திகதி அளவை மேற்கொள்ளப்பட்ட காணிப்பட வரைபு இலக்கம் 370/2019 எனும் படவரைபுக்கு ஏற்பவாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | வில்பள பொல்வத்த துணைப்பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | வில்பள பொல்வத்த துணைப்பாதை |
| பாதையின் முடிவு | : | திரு. ஐ. எல். எம். ரஷீத் அவர்கள் உரிமை கோரும் வெலிகும்புர எஸ்டேட் காணி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 45 ஈ வில்பொல |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 80 மீற்றர், அகலம்: 08 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. எஸ். எம். ஜே. உடயார் | பெளிக்கும்புர எஸ்டேட் |
| 2. திரு. யூ. எல். எம். மவ்ஜூத் | பெளிக்கும்புர எஸ்டேட் |
| 3 திரு. ஐ. எல். எம். ரஷீத் | பெளிக்கும்புர எஸ்டேட் |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திருமதி எம். எல். ஆஷியா | தங்கொல்ல வத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச்.எம்.ஆர்.டீ.கே. ஹேரத் அவர்களால் 2019.03.16 ஆந் திகதி அளக்கப்பட்ட படவரைபு இலக்கம் 367/2019 எனும் படவரைபுக்கு ஏற்பவாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | காரியகம கோப்பிவத்த வரையான பாதை. |
| பாதையின் ஆரம்பம் | : | கட்டுகஹயில் இந்து பிரதான பாதை |
| பாதையின் முடிவு | : | திரு. கே. ஜீ. திசாநாயக்க அவர்களின் உரிமை கோரும் பள்ளேஹாவத்த |
| கிராம அலுவலர் பிரிவு | : | காரியகம |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 186 மீற்றர், அகலம்: 08 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

பெயர்

கால்வாய் வழி

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. பீ. எம். ஜீ. டெனியல் பீரிஸ் | பரனவத்த |
| 2. திரு. டி. ஜீ. ரணதுங்க | ஹிடினாவத்த |
| 3. திருமதி எம். ஜீ. பிஸோமெனிகே | தலகஹவத்த |
| 4. திரு. டி. ஆர். முதியன்ஸே | தலகஹஹேன |
| 5. திரு. உபாலி தேவமித்ர ஜயமன்கல | கனேகொடஹிடினாவத்த |
| 6. திரு. கே. பீ. என். ஜி. கப்பாகொட | கனேகொட ஹிடினாவத்த |
| 7. திரு. டி. ஜி. ரணதுங்க | பரகஹவத்த |
| 8. திரு. கே. ஜீ. திசாநாயக்க | பல்லேஹவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச்.எம்.ஆர்.டீ.கே. ஹேரத் அவர்களால் 2017.05.13 ஆந் திகதி 136/ 2017 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கொட்டல்லெத்த ஊர் மத்திய பாதை (தல்கஸ்பிட்டிய தெல்எக பாதையில் இருந்து திருமதி நந்தாவதிக்குச் சொந்தமான தெனியவத்த காணி வரை |
| பாதையின் ஆரம்பம் | : | நிவாசவலையில் இருந்து தல்கஸ்பிட்டிய தெல்எக பாதைக்கு |
| பாதையின் முடிவு | : | திருமதி டி. ஜி. நந்தாவதியின் தெனியவத்த |
| கிராம அலுவலர் பிரிவு | : | ஹபலக்காவ |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 180 மீற்றர், அகலம்: 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. டி. எச். நிஹால் சந்திராசிறி | அமுஹேனவத்த |
| 2. திரு. டி. எச். ஹேமலதா தேவநாராயண | அமுஹேனவத்த |
| 3. திரு. டி. எச். எம். சரத் கருணாதிலக | அமுஹேனவத்த |
| 4. திருமதி டபிள்யூ. சிலவதி | கம்மல்கெதரவத்த |

| | |
|---|---|
| 5. திருமதி பீ. ஜீ. குசுமாவதி | கம்மல்கெதரவத்த |
| 6. திருமதி நந்தாவதீ | தெனியவத்த |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. டி. எச். உஹயவன்ங்ச | மெதபல்கம்புர உடஹபல் கும்புர |
| 2. திரு. டி. எச். சிசில் கங்காசிறி | ஹேனக்கே கும்புர |
| 3. திரு. டி. எச். சுனில் திஸ்ஸ | ஹேனக்கே கும்புர |
| 4. டி. எச. சரத் விஜேவர்தன | மல்மிகேகும்புர |
| 5. திருமதி சிலவதி | கம்மலேகெதரவத்த |
| 6. திருமதி குசுமாவதி | கம்மலேகெதரவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எம். எஸ். எம். அஜ்வாத் அவர்களால் 2017.11.12 ஆந் திகதி 11227 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தலவல கின்தர ஊடாக தலவல கடைவரை |
| பாதையின் ஆரம்பம் | : | எலிங்கிபிட்டியில் இருந்து மோரகம்மனை பிரதேச சபை பாதை |
| பாதையின் முடிவு | : | தலவலையிலிருந்து பிரதான பாதை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 47 எப் எலிங்கிபிட்டிய |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 206 மீற்றர், அகலம்: 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. எம். ஆர். ஜயந்த பண்டார | பஹலகொட்டுவ வத்தை |
| 2. திரு. எம். ஆர். சேனாநாயக்க பண்டார | ஹபுகஹமுலகொட்டுவ |
| 3. திருமதி டபிள்யூ. எம். பிசோ மெனிகே | உடஹவத்தை |
| 4. திரு. டபிள்யூ. எம். திசாநாயக்க | பல்லெயாவத்தை |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்:

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. எம். பி. பி. விஜேவர்தன | உடஹவத்தை |
| 2. திருமதி எம். இந்திராணி திலகலதா | பல்லெஹாவத்தை |
| 3. திரு. எம். பி. பி. துசிதநுவன் | பல்லெஹாவத்தை |
| 4. திருமதி பி. சீதாகுலசூரிய | பல்லெஹாவத்தை |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச்.எம்.ஆர்.டீ.கே. ஹேரத் அவர்களால் 2017.10.06 ஆந் திகதி 139/2018 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தல்கஸ்பிட்டிய ஹேனதெனிய ஊடாக பெதிகம்மன வரை துணைப்பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | தல்கஸ்பிட்டியில் இருந்து மெதிலக்குரிய பாதை பிரதேச சபைப் பாதை |
| பாதையின் முடிவு | : | மெதிலிய |
| கிராம அலுவலர் பிரிவு | : | தல்கஸ்பிட்டிய 44 C |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 269 மீற்றர், அகலம்: 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திருமதி கே. எச். தலதா குமாரி திலகரத்ன | விக்ரமஆரச்சிதெனிய |
| 2. திரு. டி. ஆர். எம். காமினி குமார ரணதுங்க | விக்ரமஆரச்சிதெனிய |
| 3. திரு. டீ. ஆர். சுனில் பண்டாரப | ரத்மல்கொல்ல |
| 4. திரு. டபிள்யு. எம். லலித் வன்தன குமார | கும்பல்லாதெனிய |
| 5. திரு. கே. எச். சுரன்கா பிரியன்கர | ரத்மல்கொல்லேஹேன |
| 6. திரு. கே. எச். சுரன்கா பிரியன்கர | ரத்மல்கொல்லேஹேன |
| 7. திரு. எஸ். எச். நவரத்ன | ஹேன்தெனிய |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. டி. ஆர். எம். காமினி குமார ரணதுங்க | விக்ரமஆரச்சிதெனின |
| 2. திரு. டீ. ஆர். சுனில் பண்டாரா | ரத்மல்கொல்ல |
| 3. திரு. கே. எச். சுரன்கா பிரியங்கர | ரத்மல்கொல்லேஹேன |
| 4. திரு. எஸ். எச். நவரத்ன | ஹேன்தெனிய |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச்.எம்.ஆர்.டீ.கே. ஹேரத் அவர்களால் 2015.12.06 ஆந் திகதி 375/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | பொல்அம்பேகொடையில் இருந்து நிகபிட்டிய பாதையில் மாரலந்தவளவ்வை அருகில் வலப்பக்கமாகத் திரும்பும் பன்சலைவத்த வரையான பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | அரநாயக மாவனல்லைப் பாதையில் இரந்து நிகபிட்டியாவுக்கு |
| பாதையின் முடிவு | : | திரு. பீ. என். பிறேமதாச அவர்கள் உரிமைகோரும் பத்தாதெனியஹேன |
| கிராம அலுவலர் பிரிவு | : | நிக்கபிட்டிய |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 214 மீற்றர், அகலம்: 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. ஐ. டி. ஆர். எஸ். ஜயசிங்ஹ மற்றும் திருமதி எம். கே. மாலாகுசும காந்தி | பத்தாதெனியேஹேன |
| 2. திருமதி எஸ். எம். தனுஜா நிரோஷனீ | பத்தாதெனியேஹேன |
| 3. திருமதி எம். கே. மாலாகுசும காந்தி | பத்தாதெனியேஹேன |
| 4. வண. டி. அனோமதஸ்ஸி ஹிமி | மெடிஹக்கே காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| காணி உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. ஐ. டி. மன்ஜுல ஜயசிங்ஹ | பத்தாதெனியேஹேன |
| 2. திரு. எம். குமுதினி அனோஷா மாரசிங்ஹ | பத்தாதெனியேஹேன |

| | | |
|---|---|---|
| 3. | திருமதி டி. ஆர். என். ஜே. குமாரி | பத்தாதெனியேஹேன |
| 4. | திரு. டி. ஜி. மார்டின் சில்வா | தொல்அம்பகலவத்த |
| 5. | திரு. ஏ. ஏ. ஆர். என். பண்டாரா | பத்தாதெனியேஹேன |
| 6. | திரு. எம். ஜீ. என். கே. ஜீ. முதுகல | பத்தாதெனியேஹேன |
| 7. | திரு. ஜி. கே. எஸ். பீ. ரத்நாயக்க | பத்தாதெனியேஹேன |
| 8. | வண. டி. அனோமதஸ்ஸி | மெடிஹக்கே காணி |

*அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச்.எம்.ஆர்.டீ.கே. ஹேரத் அவர்களால் 2018.07.14 ஆந் திகதி 155/2018 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.*

*09-790*

---

## நானாவித அறிவித்தல்கள்

### கல்பிட்டிய பிரதேச சபை

*படகோட்டம் மற்றும் காத்தாடி மூலம் நீரில் வழுக்கிச் செல்லும் பயிற்சி பணிக்கான பிரதேச முகாமைத்துவப்படுத்தும் துணை விதியின் கீழ் கட்டணம் விதித்தல் -2019*

*1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் 1 ஆம் உப பிரிவுப்படி பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்பபடி, கல்பிட்டிய பிரதே சபையினால் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் 11-7 இன் கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொது மக்களுக்கு இத்துடன் தெரியப்படுத்தப்படுகின்றது.*

*ஏ. எம். இன்பாஸ்,*
*தலைவர்,*
*கல்பிட்டிய பிரதேச சபை.*

*கல்பிட்டிய பிரதேச சபை,*
*கல்பிட்டிய,*
*2019, செத்தெம்பர் 10.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய உரியச் சட்டத்தின் 126 ஆம் பிரிவில் (vi) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கல்பிட்டிய பிரதேச சபையினால் தொகுக்கப்பட்டு, வடமேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அவர்களது அனுமதி கிடைத்த பின்பு 2019.06.28 ஆந் திகதி 2130 ஆம் இலக்கத்திற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட கல்பிட்டிய பிரதேச சபையின் படகோட்டம் மற்றும் காத்தாடி மூலம் நீரின் மீது வழுக்கிச் செல்லும் பயிற்சிப் பணிக்காக பிரதேச முகாமைத்துவம் செய்வது பற்றிய துணை விதிப்படி கீழ் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2019 ஆம் ஆண்டில் விதித்து அறவிடப்பட வேண்டும் என்று கல்பிட்டிய பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

| தொடர் இலக்கம் | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | பயிற்சி பாடசாலைக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்திற்கு அறவிடப்படுகின்ற கட்டணம் | 5,000.00 |
| 2. | பயிற்சி பாடசாலைக்காக ஆண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் | 150,000.00 |

| | | |
|---|---|---|
| *3.* | ஒரு பயிற்சியாளரிடத்தில் இருந்து அறவிடப்படுகின்ற ஆண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் | *10,000.00* |
| *4.* | பிரதேச சபையினால் கொண்டு நடாத்தப்பட்டு செல்கின்ற கடல் நீரேரி பகுதியில் படகோட்டம் மற்றும் காற்றாடி மூலம் நீரின் மீது வழுக்கிச் செல்லும் விளையாட்டினை விளையாடுவதற்காக ஒரு தினத்திற்கு அறவிடப்படும் கட்டணம் | |
| | வெளிநாட்டு | |
| | *01-03* நாட்கள் (நாளொன்றிற்கு) | *1500.00* |
| | *04-07* நாட்கள் (நாளொன்றிற்கு) | *1000.00* |
| | *08* நாட்களுக்கு அதிகமாயின் (நாளொன்றிற்கு) | *500.00* |
| | உள்நாட்டவர்களுக்கு | *500.00* |

* கல்பிட்டிய பிரதேச சபை அதிகார பிரிவில் குடியிருப்பவர்கள் விளையாடுகின்ற சந்தர்ப்பங்களில் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

*09-918*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.